[3rd April 1965

சென்னை டி.யூ.சி.எஸ். நிர்வாகச் சபையைக் கலைத்தல்

* 439 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள டி.யூ.சி.எஸ்-ன் நிர்வாக சபையைக் கலைக்க அரசாங்கம் உத்திரவிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) இச்சங்கக் குழு, கீழ்க்கண்ட காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டது :—

(1) சில வணிகர்கள் கொடுக்க முன்வந்த குறைந்த அளவு விலை விதங்களுக்கு மேல் அதிக விலையில் பண்டங்களை வாங்கியது.

(2) பண்டங்களின் விற்பனை விலை விதங்களை நேர்மையின்றி நிர்ணயித்தது.

(3) சங்கம் பெற்றுக்கொண்ட சரக்கு இருப்புக்களைக் கணக்குகளில் குறைவாக வரவு வைத்தது.

(4) சங்கக் கிளைகளுக்கு அனுப்பப்படும் பண்டங்களின் எடை குறிப்பிடப்பட்ட எடையைவிடக் குறைவாக இருந்தது. இதனால் விற்பனை செய்பவர்கள் பண்டங்களைக் குறைத்து எடை போட வேண்டி வந்தது.

(5) சரக்கு இருப்புக்களில் ஏற்பட்ட குறைவைக் கண்க்கிட்டுக் கண்டுபிடிக்கத் தவறியது. குறைவிற்குக் காரணமான நபர்களிடமிருந்து அவற்றின் விலையை வசூலிக்கத் தவறியது.

(6) நாளது தேதி வரை கணக்குகளைச் சரியாக வைத்து வராதது.

(7) பண்டங்கள் வாங்குவோரிடமிருந்து விற்பனை வரி வசூலிக்காததால் சங்கத்திற்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த டி.யூ.சி.எஸ். நிர்வாகம் யார் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அதற்காக ஸ்பெஷலாக ஒரு ஜாயின்ட் ரிஜிஸ்திரார் ஒருவரை ஏற்பாடு செய்து அவருடைய தலைமையின் கீழ் அது இப்பொழுது நடந்து வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ஆசியாவிலேயே பெரிய கூட்டுறவுச் சங்கம் என்று பெயர் பெற்ற இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் இந்த விதமான பல குறைகள் ஏற்படுகின்றன. யார் யார் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. டைரக்டர்கள், அதிகாரிகள் இவர்களில் யார் யார் பேரில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.